பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 19 சனிக்கிழமை 02.05.2020 கதிர் 178

## பாதித்தோர் எண்ணிக்கை 690 ஆனது

கொழும்பு, மே.02

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 16 பேர் நேற்று (மே 01) வெள்ளிக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பக்கம் 02

## முழங்காவில் முகாமில் இருக்கும் மற்றொருவருக்கும் கொரோனா!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே.02

முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவருக்கு கொரோனொ தொற்று இருப்பது பரிசோதனைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பக்கம் 02

## அரசின் கண்மூடித்தனத்தால் வேகமாக பரவும் கொரோனா

### குற்றம்சாட்டுகிறார் கஜேந்திரகுமார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே.02

அரசின் கண்மூடித்தனமான செயற்பாடுகள் கொரோனோ தொற்றை வேகமாகப் பரவச் செய்வதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பக்கம் 02

### இது ரகசியம் அல்ல!

ரஞ்சன் ராமநாயக்காவுக்கு எதிரான வழக்கில் அவருக்கு பிணை பெறுவதற்காக சுமந்திரன் ஆஜராகிய வழக்குத் தொடர்பாக என் பத்தியில் நான் குறிப்பிட்ட செய்திகள் தொடர்பான சர்ச்சைக்குத் தற்காலிக முற்றுப்புள்ளி பக்கம் 02

# நாடாளுமன்றக் கலைப்பை ரத்துச் செய்யக் கோரி மனு

## அடிப்படை உரிமை விண்ணப்பங்கள் ஓரிரு நாளில் உயர்நீதிமன்றில் தாக்கல்

கொழும்பு.மே 02

நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி விடுத்த உத்தரவை வெற்றும் வறிதுமானதாக அறிவிக்கக் கோரி நாட்டின் முன்னணிப் பிரஜைகள், கட்சித் தலைவர்கள் ஆகியோர் சார்பில் ஒன்றுக்கு மேற்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் ஓரிரு நாள்களில் உயர்நீதிமன்றத்தில் தாக்கலாக இருக்கின்றன என்று தெரியவந்தது. பக்கம் 02

## மே 6 தொடக்கம் 11 வரை நாடு முழுக்க ஊரடங்கு!

### வெசாக் வாரத்தில் முழு முடக்கம்

கொழும்பு,மே.02

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்களைத் தவிர, நாட்டின் 21 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு எதிர்வரும் மே 4ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மே 06ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் அதிகாலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை தளர்த்தப்படும்.

அத்துடன் இந்த 21 மாவட்டங்களிலும் மே 6ஆம் திகதி இரவு 8 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்கு உத்தரவு மே மாதம் 11ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிண்ணியாவில் மின்னல் தாக்கி ஒருவர் மரணம்

கிண்ணியா கண்டல்காடு கிராமத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார். பக்கம் 02

## பொலிஸ் மீது வழக்கு

யாழ்ப்பாணம், மே.02

குடத்தனையில் பெண்களை மூர்க்கத்தனமாகத் தாக்கிய பருத்தித்துறைப் பொலிஸாருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் காயங்களுக்கு உள்ளாகி மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண்களைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

குடத்தனை பக்கம் 02

## உள்நாட்டு பால்மா விலை அதிகரிப்பு

உள்நாட்டு பால்மா வகைகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் ஒரு கிலோகிராம் பால்மா பக்கெட்டின் விலை 945 ரூபாவாகவும் 400 கிராம் பால்மா பக்கெட்டின் விலை 380 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய விலை மாற்றம் ஏப்ரல் 28ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அதிகார சபை, உள்நாட்டு பால்மா உற்பத்தி நிறுவனங்களுக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளது.

மில்கோ, பெலவத்த மற்றும் நெஸ்லே ஆகிய உள்நாட்டு பால்மா உற்பத்தி நிறுவனங்கள் நிதியமைச்சிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## மேல் மாகாணத்துக்குள் கொரோனா கட்டுக்குள்

கொழும்பு, மே.02

மேல் மாகாணத்தில் கொரோனா வைரஸ் பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில், நாடளாவிய ரீதியில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு மே 4ஆம் திகதி தளர்த்தப்படுவது தொடர்பில் இப்போது கூறமுடியாது.

மேல் பக்கம் 02

## இரு பெண்கள் நேற்றுக் கைது

வடமராட்சி கிழக்கு குடத்தனையை சேர்ந்த இரண்டு பெண்கள் நேற்று மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று குடத்தனையில் மணல் கடத்தல்காரர் என்ற சந்தேகத்தில் பக்கம் 02

## அபாய வலயங்களில் மே 11 வரை ஊரடங்கு

கொழும்பு, மே. 02

கொரோனா அபாய வலயங்களான கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் மே 11ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் நிறுவனங்களின் மீள் செயற்பாடுகள் பக்கம் 02

## பிரதமர் அழைத்த முன்னாள் எம்.பிக்களின் கூட்டம் குறித்து கூட்டமைப்பு பேசி முடிவு

கொழும்பு.மே.02

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களின் கருத்துக்களை செவிமடுப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாளைமறுதினம் திங்கட்கிழமை அலரிமாளிகையில் கூட்டியுள்ள கூட்டத்தில் பங்குபற்றுவதா என்பது குறித்து கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் கூட்டமைப்பு உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கிய பின்னர் கூட்டமைப்புத் தலைமை முடிவு செய்யும் எனத் தெரிகின்றது.

இது தொடர்பில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த கூட்டமைப்பு உறுப்பினர்களின் கருத்தை கூட்டமைப்புத் தலைமை தற்போது கேட்டுவருவதாகக் கூறப்படுகின்றது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை எக்காரணம் கொண்டும் மீளக் கூட்டமாட்டேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிரணிக்கு எழுத்தில் பதில் கொடுத்துள்ள பின்னணியில் இந்தக் பக்கம் 02

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைத்திருக்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்.

நீதிமன்றத்தில் நடந்த விடயங்கள் தொடர்பில் எனது பத்திக் கருத்தை ஒட்டி, கொழும்புத் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் தமது முகப்புத்தகத்தில் தாறுமாறாக எழுதப் போக, நான் அதற்கு பிரதிபலிப்பைக் காட்ட... விவகாரம் நீண்டது. அந்த விடயங்கள் இந்தப் பத்தியின் வாசகர்களுக்கு நன்கு தெரியும்.

அவற்றை மீண்டும் விலாவாரியாக விவரித்து, ஜவ்வு மிட்டாய் மாதிரி இழுத்தடித்து, உங்கள் வாசிப்பை எரிச்சல் படுத்த நான் விரும்பவில்லை.

சுருக்கமாகவே கூறிவிடுகிறேன்.

நேற்று மாலை சுமந்திரனுடன் தொடர்பு கொண்டேன். அரசியல் நிலைவரங்கள், சட்ட வழக்குகள் குறித்துப் பேசினேன். இறுதியாக அவரே விடயத்துக்கு வந்தார்.

*"சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் என்னுடன் பேசினார். நான் அவருக்க ஒரு விடயத்தைச் சொன்னேன்.*

*"அரசியல் ரீதியாக என்னை விமர்சியுங்கள். தேவைப்பட்டால் பதில் தருவேன். பல சமயங்களில் வாசித்துச் சிரித்து விட்டு ஒதுங்கி விடுவேன்.*

*"ஆனால் நீதிமன்ற விடயங்கள் அப்படி அல்ல. அவை பற்றிய விவரங்களை தவறாகப் பிரசுரிப்பது – விளம்பரப்படுத்துவது – புரட்டுவது – சட்ட ரீதியாக அனுமதிக்கப்படக் கூடியதல்ல. அத்தகைய தவறுகளை திருத்தி நெறிப்படுத்துவது எமது தவிர்க்க முடியாத கட்டாய கடமை.*

*"இதற்கு முன்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் அதைச் செய்திருக்கிறேன்.*

*"இன்ன, இன்ன விடயங்களில் ஆழமான தவறுகள் உள்ளன. அவற்றை நீதிமன்றம் மூலம் திருத்துவது எனது கடமையும் பொறுப்பும். அதுவும் பகிரங்க வெளியில் அத்தவறுகள் அம்பலப்படுத்தப்பட்ட பின்னர் நான் சும்மா இருக்க முடியாது. திருத்தியாக வேண்டும் என்பதை அவருக்குச் சுட்டிக்காட்டினேன்.*

*"தாமாகவே அவற்றைத் திருத்துவார், நீதிமன்றத்தை நாங்கள் நாடத்தேவையில்லை என அவராக உறுதியளித்துள்ளார். அதற்கு உரிய கால அவகாசம் அளிப்பதே முறையானது. அதுவரைப் பார்ப்போம்.*

*"வழக்குக்கு அடுத்த தவணைக்கு இன்னும் கால்மிருக்கின்றது"* – என்றார் சுமந்திரன்.

தம்மைக் காழ்ப்புணர்ச்சியோடு – உண்மைக்கு மாறாக – பகிரங்க வெளியில் – மோசமாக விமர்சித்தவர் குறித்து எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்காமலும், தாழ்த்திப் பேசாமலும் உரையாடினார் சுமந்திரன்.

*"விடயத்தின் ஆள நீளம் நிச்சயம் அவருக்குப் புரிந்திருக்கும். அவர் சுதாகரித்துச் செயற்பட சிறிது காலம் கொடுக்கலாமே...! ஏன் அவசரம்...?"* – என்றார் சுமந்திரன்.

சட்டத்துறையில் காலத்தோடும் விளையாடுவது ஒரு கலை. தந்திரமாக அதைப் பயன்படுத்துகிறார் சுமந்திரன். அதை அவரது பலவீனமாக எடுத்தால் அது எதிர்த்தரப்பின் பலவீனமாகி விடும். இது அந்தப் பத்திரிகையாளருக்குப் புரிந்தால் சரி....!

–மின்னல்–

## பொலிஸ் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் அப்பாவிப் பெண்களை மூர்க்கத்தனமாகத் தாக்கிய பருத்தித்துறைப் பொலிஸாரின் அராஜகத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிய களத்தில் சட்டப்படி சந்திப்போம். அரச அராஜகம் எவ்வடிவில் அரங்கேறினாலும் எதிர்ப்போம் என்று அவர் கூறினார்.

## கிண்ணியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிண்ணியா காக்காமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வய தான முகம்மது பாருக் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டத்தில் பங்குற்றுவது அர்த்தமற்றது என்று தெரிவித்து மேற்படி திங்கள் நடைபெறும் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக ஜே.வி.பி. அறிவித்துவிட்டது.

இந்தக் கூட்டத்தைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற நிலைப்பாடே ஐ.தே.கட்சிக்குள்ளும், சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் அதிகம் நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

பிரதான எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தக் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கும் முடிவை எடுத்தால், கூட்டமைப்பும் அதே முடிவை எடுக்க வேண்டும் என்று கூட்டமைப்பின் முன்னாள் எம்.பிக்கள் ஒரு சிலரும் –

அடிப்படியான சந்தர்ப்பத்தில்தான் கூட்டமைப்பு தனித்து இந்தக் கூட்டத்துக்குச் சென்று தமிழர்களின் ஆதங்கங்களை பிரதமருக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று கூட்டமைப்பின் முன்னாள் எம்.பிக்களில் மற்றொரு சாராரும் – கூறுகின்றனர்.

பெரும்பாலும் அனைத்து முன்னாள் எம்.பிக்களினதும் கருத்துக்களை செவிமடுத்த பின்னர் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் இவ்விடயம் குறித்து இன்று தீர்மானிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## நாடாளுமன்றக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்கனவே இத்தகைய அடிப்படை உரிமை விண்ணப்பம் ஒன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சரித்தா மைத்திரி குணரத்ன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அதிலும் விட வலிமையான அரசமைப்புக் காரணங்கள், விளக்கங்களோடு ஒன்றுக்கு மேற்பட்ட மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் சட்ட அலுவலகம் தயாராகிக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

கொழும்பில் ஊரடங்கால் உயர்நீதிமன்ற வளாகம் பூட்டியிருக்கின்றது. இந்தக் காலகட்டத்தில் eFiling முறையில் இலத்திரனியல் பதிவில் வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியும் என்பதால், இன்று சனி, நாளை ஞாயிறுக்கிழமை விடுமுறை தினங்களிலும் இந்த வழக்குகளை கணினி மூலம் தாக்கல் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயத்தை ஒட்டி ஏற்கனவே தனித்துத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு திங்கள், செவ்வாயில் நீதிமன்றத்தில் எடுக்கப்படுமாயின், அதனோடு தவறாமல் இந்த மனுக்களும் சேர்த்து எடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதில் சுமந்திரனின் சட்ட அலுவலகம் மிக முனைப்பாக இருப்பதை அறிய முடிந்தது.

சஜித்தின் தரப்பு. ஐ.தே.க. போன்ற கட்சிகள் மற்றும் நாட்டின் மூத்த பிரமுகர்கள் சார்பில் இந்த அடிப்படை உரிமை கோரிக்கை மனுக்கள் தாக்கல் செய்யப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

## மேல் மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாகாணத்தில் கொரோனா வைரஸ் பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதில் சுகாதார சேவைகள் பிரிவினர் சிறப்பான முறையில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில், மே 4ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படுவது தொடர்பில் தற்போது கூறமுடியாதுள்ளது.

வெசாக் உற்சவ நாட்களில் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது அவசியம் என்பதோடு அதனைத் தொடர்ந்து வரும் நாள்களிலும் சுகாதார துறையினர் வழங்கும் ஆலோசனையின் படி மக்கள் செயற்படுவது அவசியம் – என்றார்.

# தாக்கப்பட்ட மக்களுக்கு சட்ட உதவியளிக்க தயார்

## மணிவண்ணன் கூறுகிறார்

(எஸ்.நிதர்ஷன்)
வடமராட்சி கிழக்கில் பொதுமக்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலைக் கண்டித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணண், பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சட்ட உதவி வழங்கத் தயராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

குடத்தனைப் பகுதியில் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாகப் பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. குறிப்பாக கடும் குற்றவாளிகளைக் கூட தாக்குவதற்கு பொலிஸாருக்கு அனுமதியோ அதிகாரமோ கிடையாது.

அப்படி இருக்கையில் ஊரடங்கு வேளை பொலிஸார் வீடு புகுந்து பெண்கள் மீது தாக்குதல் நடத்தியமை ஏற்றுக் கொள்ளப்பட முடியாத காட்டு மிராண்டித்தனமான செயல். இந்தச் செயலை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தேவையான சட்ட உதவியை வழங்க தயாராக உள்ளேன். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸார் மீது பாரபட்சமின்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – என்றார்.

## பாதித்தோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 689ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

162 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

520 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸை பரப்புவதில் இராணுவம் மிக முக்கியமான காரணியாக இருக்கும் ஒரு நிலை இன்றைக்கு உதயமாகியிருக்கிறது. இங்குள்ள முப்படைகளையும் கொரோனோ வைரஸ் தாக்கியிருக்கின்றது. குறிப்பாக கொரோனொ தொற்றில் முப்படைகளிலும்தான் கூடுதலான எண்ணிக்கையில் காணப்படுகிறது. அந்தத் தொற்று மிக வேகமாக வளர்ந்துகொண்ட வருகிறதென்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம்.

அப்படிப்பட்ட நிலையில் அந்த முப்படைகளையும் தனிமைப்படுத்தவேண்டிய இக்கட்டான நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. அவ்வாறான நிலைமையில் தான் அந்தச் செயற்பாடுகள் அனைத்திற்கும் வடக்கு – கிழக்கில் முகாம்களை அமைக்கின்றது.

அதுவும் மக்கள் செறிவாக வாழ்கின்ற இடங்களில் பொதுக் கட்டடங்கள் மற்றும் பாடசாலைகளை தனிமைப்படுத்தல் நிலையங்களாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. அதனால் அந்த இடங்களைச் சூழ வாழும் தமிழ் மக்களுக்கு நோய் பரவக்கூடிய ஆபத்தான நிலைக்கு மக்களைத் தள்ளி விடும் செயற்பாடாகத் தான் அரசின் இந்த முயற்சிகளைப் பார்க்கின்றோம்.

ஆயினும் இந்த முயற்சிகளுக்கு எதிராக மக்கள் தாங்களாவே வந்து போராடும் நிலைமையை நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது. பல இடங்களிலும் இதுதான் தற்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உலகத்திலே கொரோனோவால் பாதிக்கப்பட்டிருக்க கூடிய நாடுகள் அனைத்திலும் சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த மருத்துவர்கள், தொழிலாளர்கள் தான் கொரோனோ வைரஸ் தாக்கத்துக்கு முகங்கொடுத்து அந்த சமூகத்தைப் பாதுகாக்கின்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் இலங்கை போன்ற ஜனாநாயகம் இல்லாத நாடுகளில் தான் இராணுவத்தை முன்னிலைப்படுத்தி அந்த அந்த அரசுகள் தமது வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

இந்த அரசின் கண்மூடித்தமான செயற்பாட்டின் காரணமாக கொரோனா வைரஸ் மிக வேகமாகப் பரவவுள்ளது – என்றார்.

## முழங்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று 39 பேரின் மாதிரிகள் ஆய்வுபரிசோதனை செய்யப்பட்டன. இதில் ஒருவருக்கு மாத்திரமே தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதுடன் ஏனைய 38 பேருக்கும் தொற்றில்லை எனவும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பரிசோதனைக்குட்பட்டவர்களின் விவரங்கள்:–

போதனா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டவர்கள் – 14 பேர்.

( இவர்களில் 9 பேர் முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டவர்கள்)

போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்டவர்கள் – 4 பேர்.

வவுனியா பொது வைத்தியசாலை – ஒருவர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் நிலையம் – ஒருவர் (80 வயது முதியவர் நேற்று முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட போது இறப்பு உறுதி செய்யப்பட்டவர்)

பலாலி தனிமைப்படுத்தல் நிலையம் – 4 பேர் ( அரியாலை போதகரோடு கூடிய அளவில் தொடர்பை கொண்ட 20 பேரில் ஏற்கனவே 16 பேர் தொற்று உள்ளவர்களாக உறுதிப்படுத்தப்பட்டு விசேட சிகிச்சைக்காக அனுப்பப்பட்ட நிலையில் எஞ்சியவர்கள்)

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு – 10 பேர்.

பாதுகாப்புப் படையினர் தனிமைப்படுத்த நிலையம் கிளிநொச்சி – 5 பேர்.

## இரு பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவரை கைது செய்ய பொலிஸார் முயன்றபோது, பெண்கள் ஒன்று சேர்ந்து அதற்கு இடையூறு ஏற்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

பொலிஸாரால் பெண்கள் தாக்கப்பட்டனர் என உறவினர்கள் தெரிவித்தனர். எனினும், பொலிஸார் அதை மறுத்தனர்.

இந்த நிலையில், படுகாயமுற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு, வைத்தியசாலை அனுமதிப் பத்திரத்துடன் உணவு எடுத்துச் சென்ற இரு பெண்களை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். 24 மற்றும் 26 வயதுடைய பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடத்தனையில் இருந்து மந்திகையில் உள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் செல்லும் வழியல் மாவடிச் சந்தியில் வைத்து இந்தக் கைதைப் பொலிஸார் செய்துள்ளனர்.

## அபாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்வரும் 11 ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு இந்த மாவட்டங்க ளில் ஊரடங்கு தளர்த்தப்படும் எனவும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

# குடத்தனை மக்கள் மீது பொலிஸார் கொடூரம்!

## வடமராட்சி கிழக்கில் மூன்று பேர் படுகாயமுற்று வைத்தியசாலையில்







(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே. 02

வடமராட்சி கிழக்கு குடத்தனை – மாளிகைத்திடல் அம்மன் கோவிலடி பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த பொலிஸார் வீட்டிலிருந்தவாகள் மீதும், அயல் வீட்டவாகள் மீதும் நடத்திய கொலைவெறித் தாக்குதலில் 3 போ காயமடைந்து மந்திகை வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனா.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்று நுழைந்த பொலிஸாா், அவர்களைக் கள்ள மண் ஏற்றினார் என்றும், இதனால் ஹன்ரா வாகனத்தை எடுத்துச் செல்லப்போகிறார்கள் என்றும் கூறியிருக்கின்றனா.

இதனையடுத்து தாம் மணல் ஏற்றவில்லை எனவும், வேண்டுமெனில் வாகனத்தின் இயந்திரத்தில் சூடு இருக்கிறதா? எனப் பார்க்குமாறும் வீட்டிலிருந்த இளைஞாகள் கூறினார்.

ஆயினும் விடாப்பிடியாக நின்ற பொலிஸார் வாகனங்களைத் தாம் எடுத்து செல்லப் போவதாகக் கூறினா. இதனையடுத்து பொலிஸாரின் அத்துமீறலை அவர்கள் வீடியோ எடுத்துள்ளனா. இதனையடுத்து வீடியோ எடுத்த தொலைபேசியை பறித்த பொலிஸார், கஞ்சா வைத்துள்ளீர்கள் என வழக்குபோடுவோம் என அச்சுறுத்தியதுடன், அந்த வீடியோ வெளியே போகக்கூடாது எனவும் மிரட்டினர்.

இதனையடுத்து இன்று காலை அதே வீட்டுக்குச் சென்ற பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினா பெண்கள், ஆண்கள், சிறுவாகள், வயோதிபாகள் என அனைவா மீதும் மிருகத்தனமான தாக்குதல் நடத்தியுள்ளனா.

பெண் ஒருவரை காலால் மிதித்து அவா மயங்கி விழும்வரை அடித்துள்ளனா. இந்நிலையில் 3 போ காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனா.

இன்னும் பலா காயமடைந்துள்ளபோதும் அவாகள் அச்சத்தினால் தமது வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருக்கின்றனா என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

# குடத்தனைத் தாக்குதல் சம்பவம் பாரபட்சமற்ற விசாரணை தேவை

## ரெலோ அமைப்பு வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே. 02

வடமராட்சி கிழக்கில் பொதுமக்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலைக் கண்டிப்பதுடன் பாரபட்சமற்ற விசாரணையை அரசு முன்னெடுக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ அமைப்பின் இளைஞரணிச் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான சபா குகதாஸ் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதியிடம் விடுத்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டின் சட்ட ஒழுங்குகளைப் பாதுகாக்கவேண்டிய காவல்துறை மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் மக்களின் நண்பர்களாக நடந்து கொள்ளாமல் வன்முறையாளர்களாகச் செயற்பட்டு பெண்கள் மீது அடிதடிப் பிரயோகங்களை மேற்கொண்டமை மக்கள் மத்தியில் அச்சத்தையும் பயத்தையும் கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

பொலிஸார் இவ்வாறு நடந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லாதபோதும் எதேச்சாதிகார அதிகாரிகள் போன்று சட்டத்தை தங்களது கையில் முழுமையாக எடுத்துக் கொண்டமை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பான பாரபட்சமற்றவிசாரணைஉடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைப்பதுடன் இவ்வாறான சம்பவங்கள் மீள நடைபெறாது என்பதை நீதித் துறை உறுதி செய்ய வேண்டும்.

கொவிட் 19 பாதிப்பு ஒரு புறம் இருக்க இவ்வாறான மேலதிக பாதிப்புக்கள் மக்களின் அமைதி வாழ்வுக்கு ஆரோக்கியமானது இல்லை. எனவே அரசு உரிய விசாரணைகளை மேற்கொண்டு நியாயத்தை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவேண்டும் - என்றார்.

# பலாலியில் தனிமையிலுள்ள நால்வருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், மே. 02

பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 4 பேருக்கும் தொற்று இல்லை என யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

அரியாலை சுவிஸ் பொதகரோடு கூடிய தொடர்பைக் கொண்டிருந்த 20 பேர் பலாலியில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசொதனைகளில் 16 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

ஆதனால் அவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர். இந் நிலையில் எஞ்சியுள்ள நான்கு பேரும் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து வரும் நிலையில் அவர்களுக்கு நேற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தப் பரிசோதனைகளில் நான்கு பேரில் ஒருவருக்கும் தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422




**காலைக்கதிர்** Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

# தொற்றுத் தடுப்பு நடவடிக்கையில் வேண்டும் வெளிப்படைத்தன்மை

கொரோனா கொடூரத்தை எதிர்கொள்வதற்கு நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்புணர்வுடன் கூடிய ஒத்துழைப்புக் கோரப்படுகின்றது. குடும்பங்கள், வீடுகள், கிராமங்கள், ஊர்கள், நகரங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள், மாவட்டங்கள், மாகாணங்கள் என்று ஒன்று சேர்ந்து முழு நாடும் ஒற்றுமைப்பட்டு இந்த நுண்ணுயிரி அரக்கனை எதிர்கொண்டால்தான் இதன் பரவலையும், ஊடுருவலையும் ஓரளவேனும் கட்டுப்பாட்டில் கொண்டு வரமுடியும். இது கடந்த ஒன்றரை மாதங்களில் நாம் பட்டறிவாகக் கண்ட உண்மை.

ஒவ்வொரு பிரஜையினதும் ஒத்துழைப்பை வெறுமனே அரசியல் தலைவர்களினதும், அதிகாரிகளினதும் இது தொடர்பான வேண்டுகோள்கள், கோரிக்கைகள், விண்ணப்பங்கள், ஆலோசனைகள் போன்றவற்றை மாறி மாறி ஊடகங்களில் வெளியிடுவதன் மூலம் வென்றுவிடலாம் என்று கருதுவதில் அர்த்தமில்லை.

வழிப்படுத்துவோருக்கும், வழிப்படுத்தப்படுகின்றவனாகிய ஒவ்வொரு பிரஜைக்கும் இடையில் ஓர் ஆத்மார்த்தமான நம்பிக்கை – ஒட்டுறவு – பரஸ்பர புரிந்துணர்வு – பிறக்க வேண்டும்.

அப்போதுதான், கொரோனா வைரஸ் என்ற நுண்ணுயிர் அரக்கனை ஒழிப்பதற்கான கூட்டுணர்வுச் செயற்பாட்டுக்கான இணக்கம் – விழிப்புணர்வு – பொது எழுச்சியாக ஏற்படும்.

ஆனால், கொரோனாக் கட்டுப்பாட்டுக்கான வழிபடுத்தல்கள் எல்லாம் இராணுவக் கட்டமைப்புக்கான உத்தரவுகள் போல மேலிடத்திலிருந்த பிறக்கின்றனவே தவிர, அது தொடர்பான செயற்றிட்டத்தில் ஒவ்வொரு பிரஜையும் சமபங்காளிகள் என்ற பொறுப்புணர்வு கொண்ட கடப்பாட்டை அவை ஏற்படுத்துபவனவாக இல்லை.

இதற்கான காரணத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தனது ஊடக அறிக்கையில் சுட்டிகாட்டியிருக்கின்றார்.

கொரோனாத் தொற்று நடவடிக்கை என்ற பெயரில் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தோர் இன்னொரு மாவட்டத்துக்குச் செல்ல முடியாது எனத் தடுக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், வடக்கைப் பொறுத்தவரை இங்குள்ள நிர்வாகங்களுக்குத் தெரியாமல் வெளியில் இருந்து பலர் கூட்டி வரப்படுகின்றனர். தனிமைப்படுத்தல் என்ற பெயரில் இங்கு தடுத்து வைக்கப்படுகின்றனர்.

தென்பகுதியில் இருந்து கொரோனா வைரஸுடன் தொடர்புடைய எத்தனைபேர் வடபகுதிக்குக் கொண்டு வரப்படுகின்றார்கள், எந்தெந்த முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றார்கள், இவர்களுக்கான சுகாதாரப் பராமரிப்புகள் யாரால் மேற்கொள்ளப்படுகின்றன என்ற எந்தவொரு விடயமும் வடமாகாண ஆளுநருக்கோ, அரச அதிபர்களுக்கோ, வடமாகாண சுகாதாரச் செயலாளருக்கோ, பணிப்பாளருக்கோ தெரியாத நிலைதான் இருக்கின்றது. இவ்வாறான சகல விடயங்களும் கொழும்பில் இருந்தே நெறிப்படுத்தப்படுவனவாகவும், வெளிப்படைத் தன்மைகள் அற்றனவாகவும் தோன்றுகின்றன. – என்று விசனத்துடன் சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டுகின்ற விடயம் முற்றிலும் சரியானதுதான்.


இதுதான் இங்கு வடக்கில் உள்ள யதார்த்தக் கள நிலைமை.

வெளிப்படைத்தன்மை இல்லாமல் – ஒளிவு, மறைவாகக் காரியங்களை முன்நகர்த்தியபடி – அவற்றை முன்னெடுப்பவர்கள் யார் என்பதே மக்களுக்குத் தெரியாத, தெளிவில்லாத நிலையில் – இத்தகைய கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையில் மக்கள் முழுமையாகப் பங்கேற்க வேண்டும், ஒன்றுபட்டு இயங்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்த்தால் அது சாத்தியமாகக் கூடுமோ?

இத்தகைய பொது முயற்சியில், ஒரிருவர் ஒன்றுபட்டு செயற் படாமல் குழப்பினாலேயே அது பெரும் பின்னடைவை – விபரீத விளைவை – தந்துவிடும் என்பது நாம் உணர்ந்து கொள்ளத் தக்கதே.

ஆகவே, இந்தக் கொரோனாப் பரவல் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் குறிப்பிடத்தக்களவேனும் வெற்றியை குறுகிய காலத்தில் ஈட்டித் தரவேண்டும் என்றால் இது தொடர்பான செயற்றிட்டங்களையும் நடவடிக்கைகளையும் மக்கள் புரிந்து கொள்ளத் தக்கனவாக வெளிப்படையானவையாகவும் ஒளிவுமறைவு அற்றவையாகவும், மக்கள் எழுப்பக்கூடிய சந்தேகங்களுக்கு ஐயம்திரிபற பதில் தரக் கூடிய விதத்திலுமாக முன்னெடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.

# "என் கேள்விக்கு என்ன பதில்?" கோட்டாவிடம் மங்கள வினா!




தமது கடிதத்தில் தாம் எழுப்பியிருந்த அரசமைப்புத் தொடர்பான கேள்விகளுக்கு ஜனாதிபதியின் கடிதத்தில் பதில்கள் தரப்படவில்லை என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின்படி ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைப்பதாக வர்த்தமானியை வெளியிட்டு மூன்று மாத காலத்துக்குள் புதிய தேர்தல் நடைபெறாமையால் ஜனாதிபதி பழைய நாடாளுமன்றத்தை கூட்டி பொதுச் செலவு நிதிக்கான ஒப்புதலை பெறவேண்டும் என்று மங்கள சமரவீர தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் அரசமைப்பை மீறுவோருக்கு அதிகபட்சம் 7 வருடங்களுக்கு குடியுரிமையை ரத்துச்செய்ய சட்டத்தில் இடமிருப்பதாக மங்கள சமரவீர சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கான ஜனாதிபதியின் பதிலை அவரது செயலாளர் மங்கள சமரவீரவுக்கு அனுப்பியிருந்தார்.

அதில் மங்கள சமரவீரவின் கடிதத்தில் பல பிழையான தகவல்கள் இருக்கின்றன என் ஜனாதிபதியின் சார்பில் பி.பீ.ஜெயசுந்தர தெரிவித்திருந்தார்.

புதிய தாராளமயக்கொள்கையில் சமூக பொருளாதார மாதிரியில் நம்பிக்கை கொண்ட முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர, மக்கள் தமது ஜனநாயக உரிமையை தேர்தல் மூலம் உறுதிப்படுத்த விரும்பாமைக்காக ஜனாதிபதி வருந்துகிறார் எனவும் அதில் ஜெயசுந்தர குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து மங்கள சமரவீர தமது டுவிட்டரில் –

ஜனாதிபதி தமது முக்கியமான அரசமைப்பு கேள்விகளுக்கு பதிலளிக்காமல் தவிர்த்துள்ளார்" - எனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசமைப்பின் 150(3) பிரிவின்படி ஜனாதிபதிக்கு வெற்றுக்காசோலை வழங்கப்படவில்லை என்று மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்றம் கூட்டப்படுவதற்கான திகதியில் இருந்து 3 மாதத்துக்கு மாத்திரமே ஜனாதிபதியினால் நிதியொதுக்கீட்டை செய்ய முடியும். இந்த நிலையில் எந்த திகதியில் புதிய நாடாளுமன்றம் கூட்டப்படவுள்ளது என்று மங்கள சமரவீர தமது டுவிட்டரில் கேள்வி எழுப்பியுள்ளார்.

# முகக் கவசம் அணிந்தால் மட்டுமே ஊரடங்கு பாஸ் செல்லுபடியாகும்

கொழும்பு, மே. 02

பொலிஸ் அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்கள் சாரதிகள் மற்றும் வாகனங்களில் பயணம் செய்வோர் முகக் கவசங்கள் அணிந்திருந்தால் மட்டுமே செல்லுபடியாகும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று இரவு வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் நிலையில், நாளாந்த இயல்பு வாழ்க்கை மற்றும் நிறுவன செயற்பாடுகளை இயல்புநிலைக்கு கொண்டு வருதல் மே 11 திங்கள் ஆரம்பமாகும்.

இந்த மாவட்டங்களில் அத்தியாவசிய சேவைகளை தொடருதல் உள்ளிட்ட இயல்பு வாழ்க்கை மற்றும் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்காக அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் திங்கள் முதல் திறக்கப்பட வேண்டும். சேவைகளின் தேவையை கவனத்திற் கொண்டு அதற்குத் தேவையான திட்டங்களை இப்போதிருந்தே தயாரிக்குமாறு நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களை திறந்து பணிகளை மேற்கொள்ளும்போது கோவிட் 19 நோய்த்தொற்றை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகள் வழங்கியுள்ள வழிகாட்டல்களை முழுமையாக பின்பற்றுவதை நிறுவனத் தலைவர்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் சேவைக்கு அழைக்கப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் சேவைக்கு யாரை அழைப்பது என்பதை நிறுவனத் தலைவர்கள் தீர்மானிக்க முடியும். தனியார் துறை நிறுவனங்களை திறக்கும் நேரம் காலை 10.00 மணி என உத்தரவிடப்பட்டுள்ளது.

வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மக்கள் அநாவசியமாக வீதிகளுக்கு வருதல் மற்றும் ஏனைய இடங்களில் ஒன்றுகூடுவதை நிறுத்த வேண்டும். போக்குவரத்து சபை பேருந்துகள் மற்றும் தொடருந்துகளில் பயணிகள் போக்குவரத்து தொழிலுக்காக செல்வோருக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது.

கட்டாயமாக தொழிலுக்கு சமூகமளிக்க வேண்டியவர்கள் தவிர ஏனைய மக்கள் நோய் நிவாரணத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வீடுகளில் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

உணவு, மருந்துப்பொருள்கள் போன்ற அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்காக மட்டுமே எவரும் வீடுகளில் இருந்து வெளியில் செல்ல வேண்டும். இந்த அனைத்து சந்தர்ப்பங்களின் போதும் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான சுகாதார பரிந்துரைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் - என்றுள்ளது.

## ஊடக குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு.வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத் துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊட கம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத் தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணையுங்கள்.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம்.

உங்களின் சுயவிபரக்கோவையினை

kalaikkathironline@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தொடர்புகளுக்கு:
076 443 8623

தகவல் - நிர்வாகி
பசுமை ஊடகம்

# நூற்றாண்டைக் கண்ட ஆமை

துருக்கி நாட்டில் ஆமை ஒன்றிற்கு நூறாவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

அங்கு வடமேற்கு மாநிலமான கோகேலியில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில், அல்தாப்ரா இனத்தை சேர்ந்த வயதான ஆமை ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. 1920ஆம் ஆண்டு பிறந்த தூகி என்ற அந்த ஆமைக்கு தற்போது 100வயதாகிறது. இதையொட்டி கீரைகள், காய்கறிகளால் தயாரான கேக் மற்றும் பலூன்களுடன் ஆமையின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. ஊரடங்கு அமலில் உள்ளதால் மிருக காட்சி சாலை மூடப்பட்டுள்ளது. அதனால் பார்வையாளர்கள் யாரும் மிருகக் காட்சிசாலையில் அனுமதிக்கப்படவில்லை.



# கொரோனா நோய்ப் பரவல் 2022க்குப் பின்பும் நீடிக்கும்

## ஆய்வு அறிக்கையில் தகவல்



கொரோனா நோய் பரவல் 2022ஆம் ஆண்டுக்கு அப்பாலும் நீடிக்கும் என ஆய்வுத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் மின்னசோட்டா பல்கலைகழக தொற்று நோய் ஆராய்ச்சி மற்றும் கொள்மை மைய நிபுணர்கள் ஆய்வு நடத்தி வெளியிட்டுள்ள அறிக்கையில், கொரோனா அலை அலையாக பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது.

உலக மொத்த மக்கள் தொகையில் 3இல் 2 பங்கு மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் வரை அந்நோய் பரவலை கட்டுப்படுத்த முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த அறிகுறியும் இல்லாமல் மக்களிடையே பரவும் தன்மை கொரோனாவுக்கு இருப்பதை அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள நிபுணர்கள், குளிர்காய்ச்சலை (influenza) கட்டுபடுத்தியதை காட்டிலும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம் எனவும் கூறியுள்ளனர்.

# கொரோன எச்சரிக்கையை அமெரிக்கா பொருட்படுத்தவில்லை என்கின்றது சீனா




கொரோனா பரவல் குறித்து ஜனவரி மாதத்திலேயே அமெரிக்காவுக்குத் தெரியபடுத்தியதாகவும், ஆனால் அதை அமெரிக்கா தான் பொருட்படுத்தவில்லை எனவும் சீனா தெரி வித்துள்ளது.

ட்விட்டரில் பிரான்ஸ் நாட் டுக்கான சீனத் தூதரகம், ஒன்ஸ் அப்பான் ஏ வைரஸ் (once upon a virus) என்ற பெயரில் அனிமேசன் வீடியோ வெளியிட்டுள்ளது.

அந்த வீடியோவில் கொரோனா பரவல் கால அட்டவணை, சீனா மற்றும் அமெரிக்கா பரஸ்பரம் குற்றம்சாட்டுவதை அடிப்படையிலான கார்டூன் காட்சிகள் உள்ளன.

அதில் ஜனவரி மாதத்திலேயே கொரோனோ குறித்து அமெரிக்காவிடம் சீனா தெரியபடுத்தியதாகவும், அதை அமெரிக்காதான் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாக்.சபாநாயகருக்கும் கொரோனாத் தொற்று!



பாகிஸ்தான் நாடாளுமன்ற தேசிய சபை (national assembly) சபாநாயகர் ஆசாத் குவாசிருக்கு (Asad Qaiser ) கொரோனா நோய் உறுதியாகியிருப்பதால், நோய் பரவலைத் தடுக்கவர் தன்னைத் தானே தனிமைபடுத்திக் கொண்டுள்ளார்.

காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்தமையால் ஆசாத் குவாசிர் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டார்.

இதில் அவருக்கு கொரோனா நோய் உறுதியாகியிருப்பது தெரிய வந்துள்ளது. இதையடுத்து ஆசாத் குவாசிர் தம்மை தாமே வீட்டில் சுயதனிமைக்கு உட்படுத்திக் கொண்டுள்ளார்.

இதேபோல் ஆசாத் குவாசிரின் மகன், மகள் ஆகியோருக்கும் கொரோனா உறுதியாகி உள்ளதால் அவர்களும் தங்களை தாங்களே தனிமைபடுத்திக் கொண்டுள்ளனர்.

# கொரோனா அறிகுறி உள்ளவர்களுக்காக ஜப்பானில் திறக்கப்பட்டுள்ள ஹோட்டல்கள்

## செவிலியர்களுக்குப் பதிலாக ரோபோக்கள்



குறைந்த அளவு கொரோனா அறிகுறி உள்ள நோயாளிகளைத் தங்க வைத்து சிகிச்சை அளிப்பதற்காக ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் திறக்கப்பட்டுள்ள இரு ஹோட்டல்களில் செவிலியர்களுக்குப் பதிலாக ரோபோக்கள் பணிவிடைகள் மேற்கொண்டு வருகின்றன.

இதில் பெப்பர் எனப் பெயரிடப்பட்டுள்ள ரோபோ நோயாளிகளுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் பேசுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஹோட்டலுக்கு வருகை தந்த டோக்கியோ ஆளுநர் யுரிக்கோ கொய்க்கியை (Yuriko Koike) இந்த பெப்பர் ரோபோ வரவேற்று அசத்தியது.

செயற்கை நுண்ணறிவுடன் வடிவமைக்கப்பட்டுள்ள மற்றொரு ரோபோ, கொரோனா நோயாளிகள் தங்கவைக்கப் பட்டுள்ள பகுதிகளுக்குச் சென்று கிருமிநாசினி தெளித்து சுத்தம் செய்கிறது. ஸ்மார்ட்போன் மூலம் நோயாளிகளின் உடல்வெப்பநிலையை நாளொன்றுக்கு இருமுறை பரிசோதனை செய்யும் பணியையும் இந்த ரோபோட்டுகள் செய்கின்றன.

# கொரோனா வைரஸ் சீன ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டதற்கு ஆதாரம் இல்லை

## ஆஸ்திரேலியப் பிரதமர் கூறுகின்றார்

கான்பெரா,மே 01

கொரோனா வைரஸ் சீன ஆய்வகத்தில் உருவானது என்று தாம் நம்பவில்லை என்று ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மோரிசன் கூறி இருக்கிறார்.

உலக உயிர் கொல்லியாக மாறிவிட்ட கொரோனா வைரஸ் சீனாவின் வுகான் நகர ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டது என அமெரிக்க அதிபர் டிரம்ப் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்.

இதற்கு ஆதரவாக பேசிய ஆஸ்திரேலியா, அது குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

இந்த நிலையில் கான்பெராவில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் ஸ்கொட் மோரிசனிடம் டிரம்பின் பேச்சு பற்றி கேள்வி எழுப்பப்பட்டது.



அதற்கு பதிலளித்த அவர் கொரோனா வைரஸ் ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை எனக் கூறினார். தொற்று பரவிய நேரத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாகவே ஆஸ்திரேலியா முதலில் விசாரணை கோரியது என்றும் அவர் தெரிவித்தார்.

# இந்தியாவில் 35 ஆயிரத்தைக் கடந்தது கொரோனா பாதிப்பு: நாடு முழுவதும் ஊரடங்கு மேலும் இரு வாரங்களுக்கு நீடிப்பு

டெல்லி,மே02

இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 35 ஆயிரத்தை தாண்டியுள்ளது என மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் நாளை முதல் மேலும் இரு வாரங்களுக்கு ஊரடங்கு உத்தரவு நீட்டிக்கப்பட்டு உள்ளது.

முதலில் கடந்த மார்ச் 24 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவு ஏப்ரல் 14 ஆம் திகதி வரை தொடர்ந்து 21 நாள்களுக்கு அமலில் இருந்தது. பின்னர் வைரஸ் பாதிப்பு தீவிரமடைந்த நிலையில், ஊரடங்கு நாளை 3 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டது.

இப்போது நாடு முழுவதுக்குமான அந்த ஊரடங்கு உத்தரவு மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டு உள்ளது. அதாவது மே 17 ஆம் தேதி வரை ஊரடங்கு நீடிக்கப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆனாலும், கொரோனா தொற்று அறிகுறியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாள்களாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்நிலையில், இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிப்பு அடைந்தோர் 35 ஆயிரத்தை தாண்டியுள்ளது என மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்தியில் –

இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போதைய நிலவரப்படி 35 ஆயிரத்து 365 ஆக அதிகரித்துள்ளது. மேலும், கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 9,064 ஆக உள்ளது. அதேபோல், கொரோனா பாதிப்பால் பலியானோர் எண்ணிக்கை 1,152 ஆக உயர்ந்துள்ளது.

## மகாராஷ்டிராவில் நேற்று ஒரே நாளில் மட்டும் 1,008 பேருக்குத் தொற்று



### கொரோனா பிடியில் மகாராஷ்டிரா

மகாராஷ்டிராவில் நேற்று ஒரே நாளில் 1,008 பேருக்கு கொரோனா இருப்பது பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநிலம் முழுவதும் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 11,506 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா தொற்றுக்கு நேற்று மட்டும் 26 பேர் உள்பட இதுவரை 485 பேர் உயிரிழந்துள்ளனர்.

# காஷ்மீர் முதல் குமரி வரை மருத்துவமனைகள் மீது நாளை விமானப்படையின் விமானங்கள் மலர் தூவும்

## கொரோனா போராளிகளுக்கு நன்றி சொல்ல பல்வேறு நடவடிக்கைகள்

புதுடில்லி,மே02

கொரோனா தடுப்பு பணியில் உள்ள டாக்டர்கள், தாதியர்கள் உள்ளிட்ட தூய்மைப்பணியாளர்களை கௌரவப்படுத்தும் வகையில், மே 3 ஆம் திகதி, மருத்துவமனைகள் மீது மலர்தூவப்படும். கடற்படை கப்பல்கள் கடலில் அணிவகுப்பு நடத்தும் என முப்படைத் தலைமை தளபதி பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத், ராணுவதளபதி நரவானே, விமானப் படை தளபதி பதூரியா மற்றும் கடற்படை தளபதி நேற்றுக் கூட்டாக நிருபர்களை சந்தித்தனர்.



அப்போது முப்படைத் தலைமை தளபதி பிபின் ராவத் கூறியவை வருமாறு:–

ஆயுதப்படைகள் சார்பில் கொரோனா போராளிகளுக்கு நன்றி சொல்ல விரும்புகிறோம். டாக்டர்கள், செவிலியர்கள், தூய்மைப்பணியாளர்கள், பொலிஸார், ஊர்காவல் படையினர், ஊடகத் துறையை சேர்ந்தவர்கள், இந்த கடினமான நேரத்தில், மக்களை எப்படி காப்பது என்ற அரசின் செய்தியை கொண்டு சேர்த்துள்ளனர். கொரோனா தடுப்பில் ஈடுபட்டவர்களை கௌரவப்படுத்தும் விதமாக, நாளை காஷ்மீர் முதல் குமரி வரை விமானப்படை விமானங்கள் பறந்து மருத்துவமனைகள் மீது மலர் தூவும். கடற்படை சார்பில் கடலில் கப்பல்கள் அணிவகுப்பு நடத்தப்படும். கடற்படை விமானங்களும், மருத்துவமனைகள் மீது மலர் தூவும். இராணுவம் சார்பில் அணிவகுப்பு பாண்ட் வாத்திய இசைநிகழ்ச்சி நடத்தப்படும். மாவட்டங்களில் உள்ள கொரோனா சிறப்பு மருத்துவமனைகள் முன்பு இராணுவம் சார்பில் இசை நிகழ்ச்சி நடத்தப்படும். பொலிஸ் நினைவிடத்தில் பாதுகாப்பு படை சார்பில்மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படும்

கொரோனா பாதித்த சிவப்பு மண்டலங்களில், பொலிஸார் சிறப்பான பணியை மேற்கொள்கின்றனர். அந்த பகுதியில் எந்த நடவடிக்கையும் அவர்களால் எடுக்க முடியும். அங்கு, இராணுவத்தை களமிறக்குவதற்கான தேவையில்லை. பயங்கரவாதம் அல்லது ஊடுருவலுக்கு எதிரான நடவடிக்கையைக் கைவிடவில்லை. – இவ்வாறு அவர் கூறினார்.

இராணுவத் தளபதி நரவானே கூறியவை வருமாறு:–

கொரோனா விவகாரத்தை கையாள்வதில் எந்த பிரச்னையும் இல்லை. இராணுவத்தில் கொரோனா பாதித்த முதல் நபர் குணமடைந்து பணியில் சேர்ந்துவிட்டார். ஈராணுவத்தில் 14 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதில்,5 பேர் குணமடைந்து பணியில் சேர்ந்து விட்டனர். கொரோனா காரணமாக பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையைக் கைவிடவில்லை.– என்றார்.

விமானப்படை தளபதி பதூரியா கூறியவை வருமாறு:–

தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளோம். விமானப்படையில் யாருக்கும் கொரோனா பாதிப்பு இல்லை. வீரர்களின் நலனை காக்கும் நடவடிக்கைகள் தொடரும். – இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ்நாட்டில் கொரோனா நேற்றுடன் 2,526 பேருக்கு!

சென்னை,மே02

தமிழகத்தில் கொரோனா வைரஸால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 2,526 ஆக அதிகரித்துள்ளது என சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரசின் தாக்கம் தமிழகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த முதலாம் தேதி முதல் கொரோனாவால் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த ஊரட்ங்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்து கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இதற்கிடையே, தமிழக அரசு நேற்று வெளியிட்ட தகவலின்படி, தமிழகத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2323 ஆக இருந்தது.

இந்நிலையில், தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 2526 ஆக அதிகரித்துள்ளது.

இதுதொடர்பாக, தமிழக சுகாதாரத் துறை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் கொரோனா வைரசால் இன்று(நேற்று) மேலும் 203 பேர் பாதிப்பு அடைந்துள்ளனர். இதையடுத்து கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 2,526 ஆக உயர்ந்துள்ளது. கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது என தெரிவித்துள்ளது.

# செய்தித்தாள் ஊடகங்களுக்கு பல்லாயிரம் கோடி ரூபா நஷ்டம்

கொரோனா நெருக்கடியை ஒட்டிய ஊரடங்கால் செய்தித்தாள் ஊடகங்களுக்கு 15ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்படும் நிலை உள்ளதால் ஊக்குவிப்புத் திட்டங்களை அறிவிக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது.

இந்தியச் செய்தித்தாள்கள் சங்கத் தலைவர் சைலேஷ் குப்தா மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அதில் கடந்த இரு மாதங்களாகச் செய்தித்தாள் ஊடகங்களுக்கு நாலாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அடுத்த 7 மாதங்களில் கூடுதலாக 15 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் செய்தி அச்சிடும் தாள்களுக்கு 5 வீத இறக்குமதி வரியை நீக்க வேண்டும் என்றும், 2 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

விளம்பரக் கட்டணத்தை 50 விழுக்காடு உயர்த்த வேண்டும் என்றும், கட்டண நிலுவைகளை மத்திய மாநில அரசுகள் உடனடியாக வழங்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் சைலேஷ் குப்தா வலியுறுத்தியுள்ளார்.

# ஊரடங்கில் கட்டாய டியூஷனா? பொலிஸைக் கூட்டி வந்த சிறுவன்

## பஞ்சாப்பில் நடந்த ருசிகரச் சம்பவம்


நாடே ஊரடங்கில் இருக்கும் போது தன்னை மட்டும் டியூனுக்கு கட்டாயப்படுத்துகின்றனர் எனவும், அதகாகப் பெற்றோர் மற்றும் ஆசிரியையைக் கைது செய்யுமாறும் கோரி 5 வயதுச் சிறுவன் காவல்துறையினரை அழைத்து வந்த ருசிகர சம்பவம் பஞ்சாப் மாநிலம் படாலா நகரில் அரங்கேறியுள்ளது.


அழுகையும் ஆத்திரமுமாக டியூனுக்குச் சென்று வந்த பையன் ஒரு கட்டத்தில் பொறுத்தது போதும் என்று பொங்கியெழுந்து காவல் நிலையத்துக்குப் படையெடுத்தான்.

சிறுவனின் புகாரை ஏற்று அவனுடன் சென்ற படாலா டி.எஸ்.பி. உள்ளிட்ட காவல் துறையினர் ஊரடங்கு நேரத்தில் இவ்வாறு நடந்துகொள்ளக் கூடாது என டியூன் ஆசிரியைக்கு அறிவுறுத்தினர்.

அதைத் தொடர்ந்து சிறுவனின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் அவனது பெற்றோரையும் அறிவுறுத்தி சிறுவனை வீட்டில் விட்டுச் சென்றனர்


படம் 1


படம் 2


படம் 3

# தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

மடிமைலகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'கைபேசி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பி யிருந்தனர்.
தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

அ. க. நிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எம். ஐ. எவ். ஹுமைரா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். எவ். பஸ்லுல்லாஹ் - தரம் 7
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எவ். ஸுமையா - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

யதுஷி ரமேஷ் - தரம் 8
யா/ பன்னாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

ரமேஷ் ரம்மியன் - தரம் 5
யா/ பன்னாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

ரங்கதாஸ் பவினேஷ் - தரம் 1
யா/ மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை

ஜி. பவித்திரன் - தரம் 8
யா/ ஹாட்லிக் கல்லூரி

ஜி. வர்சிகா - தரம் 3
வல்வை அமெரிக்கன்மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை

ஹிமா இஸ்ஸத் - தரம்5
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எவ். நஸ்மியா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

வி. தனிஸ்ரன் - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

வி. சலோமி - தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

பிரபாகர் அபிஜித் - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எம். நஸீம் - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

லோ. சிவயாணு - தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

சிறாந்தி சிறிசுதாகரன் - தரம் 1
யா/ உடுவில் மகளிர் கல்லூரி

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

இ. பவிான் - தரம் 3
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

திலகராஜ் திலக்சயன் - தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

டேவிட்ராஜ் பிலெஸ்ஷின் - தரம் 5
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

உ. நிலக்ஷா - தரம் 6
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

சி. சுகர்மன் - தரம் 6
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

றொபின்சன் ஷெர்வின் - தரம் 4
பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு

பி. பார்கவி - தரம் 6
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

ஆயிழை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

படம் 1
பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

படம் 2
பிரபாகர் மயூரி - தரம் 7
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

படம் 3
செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'நீர்வீழ்ச்சி'

காலைக்கதிர்
Kalaikkathir
நீர்வீழ்ச்சி
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு
தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி



இன்று (02/05/2020) தலைப்பு
நீர்வீழ்ச்சி

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# தனிமைப்படுத்தும் நிலையங்களாக கல்வி நிலையங்களை மாற்றாதீர்கள்!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் வலியுறுத்தல்



கொரோனா தொற்று உள்ளவர்கள் என சந்தேகிக்கப்படும் படையினரை வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையங்களில் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வெளிவந்த செய்தியை அடுத்து அதனை கைவிடுமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் இணைப்பேச்சாளருமான சுரேஷ் க.பிறேமச்சந்திரன் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் விவரம் வருமாறு:-

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தொடங்கி ஏறத்தாழ 50 நாள்கள் கடந்துவிட்டன. பல்வேறுபட்ட மாவட்டங்களில் தொடர் ஊரடங்கு நடைமுறையில் இருந்து வருகிறது.

இலங்கையின் பல பாகங்களிலும் கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளானவர்களை அல்லது அந்த நோய்த்தொற்றுள்ளவர்களுடன் தொடர்புடையவர்களை கண்காணிப்பதற்காக தனிமைப்படுத்தல் முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் பல்வேறுபட்ட இராணுவ முகாம்களும் கடற்படை முகாம்களும் விமானத் தளங்களும் இத்தகைய தனிமைப்படுத்தல் முகாம்களாக மாற்றியமைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான முகாம்களில் மிகப்பெருமளவில் கொரோனா வைரஸ் தாக்கத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற அடிப்படையில் பல நூற்றுக்கணக்கானவர்கள் தென்பகுதியிலிருந்து அழைத்துவரப்பட்டு தங்கவைக்கப் பட்டிருந்தனர்.

அது மட்டுமன்றி, வெளிநாடுகளிலிருந்து இலங்கையை வந்தடைந்த பிரயாணிகளுக்கும் இத்தகைய தொற்றுக்கள் உள்ளனவா என்பதை அவதானிப்பதற்காக அவர்களும் இங்கே கொண்டுவரப்பட்டனர். இவ்வாறான முகாம்களை வடக்கிலோ கிழக்கிலோ ஏனைய மாகாணங்களிலோ அமைக்கும் போது அது படையினர் எடுத்த முடிவா? துறைசார் வைத்திய நிபுணர்கள் எடுத்த முடிவா? என்ற கேள்வி எழுகின்றது.

தென் பகுதியில் இருந்து கொரனோ வைரஸுடன் தொடர்புடைய எத்தனைபேர் வடபகுதிக்கு கொண்டு வரப்படுகிறார்கள், எந்தெந்த முகாம்களில் தங்க வைக்கப்படுகிறார்கள், இவர்களது சுகாதாரப்பராமரிப்புக்கள் யாரால் மேற்கொள்ளப்படுகின்றன என்ற எந்தவொரு விடயமும் வடமாகாண ஆளுநருக்கோ, அரச அதிபர்களுக்கோ, வடமாகாண சுகாதார செயலாளருக்கோ, பணிப்பாளர்களுக்கோ தெரியாத நிலைதான் இருக்கின்றது.

இவ்வாறான சகல விடயங்களும் கொழும்பில் இருந்தே நெறிப்படுத்தப்படுவனவாகவும் வெளிப்படைத்தன்மைகள் அற்றனவாகவும் தோன்றுகின்றன.

கொரோனா தொற்று என்பது ஓர் உலகளாவிய கொள்ளை நோய் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த நோய்க்கான மருந்தும், தடுப்பு மருந்தும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நோய் மனிதர்களினூடாக மிகப்பெரிய அளவில் தொற்றுவதாகச் சொல்லப்படுகிறது.

இதன் காரணமாகவே ஊரடங்குச் சட்டங்கள் அமுல்படுத்தலும், சமூக இடைவெளியைப் பேணுமாறு கோருவதும், தனிமையில் இருக்குமாறு கோருவதும் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அரசாங்கம் மாவட்டம் விட்டு மாவட்டம் அல்லது நீண்ட தூரங்களிலிருந்து கொரோனா நோய்த்தொற்று உள்ளவர்களாக சந்தேகிக்கின்றவர்களை அழைத்து வந்து வேறு மாவட்ட முகாம்களில் தங்கவைத்திருப்பது சரியான செயற்பாடா என்ற பாரிய கேள்வி எழுகின்றது.

இப்பொழுது கொரோனா நோய் அடையாளம் காணப்பட்டதன் காரணமாக ஒருசில இராணுவ, முகாம்களும் கடற்படை முகாம்களும் மூடப்பட்டிருக்கின்றன என அறிகின்றோம்.

அதனால் கொரோனா தொற்றுக்குள்ளான படையினரைத் தனிமைப்படுத்தி வைத்திருக்க இப்பொழுது புதிய முகாம்களை படையினர் தேடி வருகின்றமையைப் பார்க்க முடிகின்றது. கோப்பாய் கல்வியியல் கல்லூரி, வவுனியா மத்திய மகாவித்தியாலயம், கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயம் போன்ற பல பாடசாலைகள் படையினரைத் தனிமைப்படுத்தும் முகாம்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று தென்னிலங்கையிலும் ஒரு சில பாடசாலைகளை கையகப்படுத்தியிருக்கலாம்.

ஆனால் இத்தகைய கல்வியியல் கல்லூரிகளும் பாடசாலைகளும் மக்கள் செறிந்துவாழும் பிரதேசங்களில் உள்ளன. அங்கு தனிமைப்படுத்தும் முகாம்கள் உருவாக்கப்படுவதை அப்பிரதேச மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அரசின் இந்நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

ஒரு பக்கத்தில் பாடசாலைகளையும் கல்விக்கூடங்களையும் தனிமைப்படுத்தும் நிலையங்களாக மாற்றுவதற்கு பொலிஸார் ஊடாகவும் இராணுவத்தினர் ஊடாகவும் நடவடிக்கை எடுக்கும் அதே நேரம் நாங்கள் பாடசாலைகளையோ கல்விக்கூடங்களையோ கையகப்படுத்த மாட்டோம் என அறிக்கை விடுவது மக்களை ஏமாற்றும் செயற்பாடாகவே உள்ளது.

சில வாரங்களிலோ அல்லது சில மாதங்களிலோ கொரோனா தொற்று நீங்கினாலும் மாணவர்களோ ஆசிரியர்களோ, கல்வி திணைக்கள அதிகாரிகளோ இத்தகைய கல்வி நிலையங்களுக்குள் உள்நுழைவதற்கு அச்சத்தை ஏற்படுத்தும்.

என்னதான் அரசாங்கம் கிருமித்தொற்று நீக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஆபத்து நீங்கிவிட்டது என்று அறிவித்தாலும் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்களின் அச்சம் நீங்குவது சந்தேகமே! ஆகவே இத்தகைய தனிமைப்படுத்தும் முகாம்களை மக்கள் நடமாட்டம் அற்ற பிரதேசங்களில் வைத்திருப்பதுதானே சிறப்பானதாக இருக்க முடியும்.

மாறாக, அரசின் இவ்வாறான முடிவுகள் சுகாதார நிபுணர்களின் ஆலோசனைகளின் பேரில் மேற்கொள்ளப்படுகின்றனவா அல்லது படையினரினால் தன்னிச்சையாகவே மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற கேள்வி எமக்கு எழுகிறது.

ஆகவே பொலிஸாரைக் குவித்து பதற்றமான சூழலை உருவாக்கி, இத்தகைய தனிமைப்படுத்தல் முகாம்களை அமைப்பதை அரசாங்கம் கைவிட வேண்டும் என்று கோருகின்றோம்.

கொரோனா தொற்று ஆரம்பித்த காலத்தில் இருந்து வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களும் கொரோனா தொற்று அற்ற மாவட்டங்களாகவே இருந்தது.

பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்த கொரனோ தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதுவும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. கடந்த இரண்டு வாரங்களாக யாழ்ப்பாணத்திலும் கொரனோ தொற்றாளர்கள் என எவரும் இனங்காணப்படவில்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு மாகாணமானது கொரோனா அச்சத்திலிருந்து ஓரளவிற்கு விடுபட்டு மீளும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

ஆனால் அரசாங்கத்தின் புதிய தனிமைப்படுத்தல் முகாம்களை ஆரம்பிக்கும் நடவடிக்கையானது, மீண்டும் வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

இதே போன்று நுவரெலியா மாவட்டம் மற்றும் வேறு சில மாவட்டங்களும் கொரனா தொற்று ஏற்படாத மாவட்டங்களாக உள்ளன. எனவே இவ்வாறான மாவட்டங்களுக்கோ மாகாணங்களுக்கோ சென்று வருபவர்களை மாகாணத்தின் எல்லையிலோ மாவட்டத்தின் எல்லையிலோ பரிசோதனை செய்து அனுப்புவதனூடாக பகுதி பகுதியாக கொரனா தொற்று அற்ற பிரதேசங்களை உருவாக்க முடியும் என்பது எங்கள் கருத்து.

மாவட்ட ரீதியாகவோ மாகாண ரீதியாகவோ கொரோனா அற்ற மாவட்டங்களை இனங்கண்டு அந்த மாவட்டங்களின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்புவது என்பது ஒரு சிறப்பான நடவடிக்கையாக இருக்கும். அதனை விடுத்து, கொரோனா அச்சம் குறைவடைந்து செல்லும் மாவட்டங்களில் மீண்டும் இத்தகைய தனிமைப்படுத்தும் முகாம்களைத் திறந்து நோய்த்தொற்றாளர்களைக் கொண்டுவந்து வைத்திருப்பதானது ஏற்புடையதுமல்ல, ஆரோக்கியமானதுமல்ல. கொரனா தொற்று நோயை அழிப்பதை வெறுமனே ஓர் இராணுவ நடவடிக்கை போன்று பார்க்காமல் அரசாங்கம் அந்தந்த மாவட்டம் மற்றும் மாகாணங்களில் உள்ள வைத்திய நிபுணர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரை யாடி முடிவுகளை மேற்கொள்வதே உகந்ததாக இருக்கும். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# மூதறிஞர் ஆ.சபாரத்தினம் பிரிந்தார்

ஊர்காவற்றுறை கரம்பனைப் பிறப்பிடமாகக்கொண்ட மூதறிஞர், சைவசித்தாந்த வித்தகர்ஆ.சபாரத்தினம் ஆசிரியர் (காவல் நகரோன்) இறைவனடி சேர்ந்தார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த இவர் சைவசித்தாந்தம், கீழைத்தேய அல்லது இந்திய தத்துவதிலும் பரந்து பட்ட அறிவைக்கொண்டிருந்தார்.

நாவலர்பாரம்பரியத்தின் கடைசி மாணவன் எனக்கருதப்படும் முதுபெரும் அறிஞரான பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு ஆங்கில நூல்களிலிருந்து தகவல்களை மொழிபெயர்ப்புச்செய்து உதவியமையுடன் அளவையூர் பொ. கைலாசபதியின் சிந்தனைகள் என்ற நூலைப் பேராசிரியர் சுசீந்திரராஜாவுடன் இணைந்து தொகுத்து வெளியிட்டார்.

சுவீடிஷ் பல்கலைக்கழக பேராசிரியர் பீட்டர் ரோல்க் சைவசித்தாந்தம் பற்றி யாழ் பல்கலைக் கழக்தில் ஆற்றிய உரையை மொழிபெயர்ப்புச் செய்தமையுடன் பேராசிரியரின் வீரசைவம் பற்றிய ஆய்வுக்கு தேவையான தகவல்களை யாழ்ப்பாணத்திலுள்ள வீரசைவகுருமாருடன் தொடர்பு கொண்டு பெற்று அனுப்பியவர்.

ஊடகவியலாளர் ந.பரமேஸ்வரன் யாழ்ப்பாண கச்சேரியின் வரலாற்றை தொகுத்த போது பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் அரசாங்க அதிபராக கடமையாற்றியவர்கள் தொடர்பான தகவல்களை வழங்கியவர்.

வரலாற்று ஆசிரியரான இவர் வரலாறு தொடர்பான பல நூல்களையும் எழுதியுள்ளார். கரம்பன் சண்முகநாத வித்தியாலய அதிபராக கடமையற்றி ஓய்வு பெற்ற பின்னர் தனது சொந்த ஊரிலிருந்து இடம்பெயர்ந்து யாழ் நகரப்பகுதியில் வசித்து வந்தார். யாழ் பொது சன நூலகத்தின் ஆரம்பகால (1954 முதல்) உறுப்பினரான இவர் பல மாணவர்களை நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைத்துள்ளார்.



நடமாடும் கலைக்களஞ்சியமாக! விளங்கிய சபாரத்தினம் ஆசிரிய பெருந்தகை கற்றுகுட்டிகள் முதல் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் வரை தன்னை நாடி வருவோரை காலநேரம் பாராது இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து அவர்கள் தேடும் விடயத்தை ஆதாரத்துடன் தேடி எடுத்து வழங்கும் ஒரு மாமனிதர்.

சில வேளை உடனடியாக அவர்கள் தேடும் தகவலை வழங்க முடியா விட்டால் தகவல் கிடைத்தவுடன் காலநேரம் பாராது தேடி எடுத்து (தனது தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தி) வழங்கும் ஓர் உன்னதமான மனிதர். சபாரத்தினம் ஆசிரியரின் வீட்டுக்கு செல்பவர்கள் யாராக இருந்தாலும் படலையை திறக்கத்தேவையில்லை. வாசலில் ஆள் நடமாட்டத்தைக் கண்டதும் உடனே தானே எழுந்து வந்து படலையைத்திறந்து அழைத்துச்செல்லும் உயரிய பண்பாளர்.

அன்னாரின் இழப்பு ஈழத்தமிழ் சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பு. அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை யாழ் கலட்டி அம்மன் கோயில் அருகிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறுமென உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# நடமாடும் நூலகமாக உதவிய பேரறிஞர்

## இரங்கல் செய்தியில் ஆறு.திருமுருகன் விதந்துரைப்பு

மூதறிஞர்,சைவசித்தாந்த வித்தகர்.ஆ.சபாரத்தினம் அவர்களின் பிரிவுச்செய்தி சைவ மக்களுக்கு மிகுந்த கவலைதரும் செய்தியாகும் என்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக சைவசித்தாந்தத்தையும்,தமிழ் இலக்கண இலக்கியத்தையும் பலருக்குக் கற்பித்த நல்லாசானும் பல வரலாற்று நூல்கள் அச்சேறுவதற்கு அயராது தொண்டாற்றியவருமாகிய மூதறிஞர் ஆ.சபாரத்தினம் ஐயா அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த கவலையடைகிறேன்.

பண்டிதமணி,அளவை பெ.கைலாசபதி போன்றவர்களின் ஆக்கங்களை அச்சேற்றுவதில் அயராது உழைத்த பெருந்தகை.பல பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆய்வுபணிகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் இப்பெருந்தகை அவர்களின் பங்களிப்பை பெறத்தவறவில்லை. எவர்க்கும் எவ்வேளையும் நடமாடும்நூலகமாக உதவிய பேரறிஞரின் பிரிவு ஈடுசெய்ய முடியாதது.

நாரந்தனையில் பிறந்து நீண்டகாலம் கரம்பனில் வாழ்ந்த இவர், கரம்பன் சண்முகானந்த வித்தியாலயத்தில் அதிபராக நீண்ட காலம் பணியாற்றியவர்.

இவரது சேவையைப் பாராட்டி பல நிறுவனங்கள் இவரைக் கௌரவத்துச் சிறப்பித்தன. யாழ்பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவிலும் இவருக்கு சிறப்பான கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆங்கில இலக்கிய புலமை மிக்க இவரை சுவீடனிலுள்ள உப்சலாப் பல்கலைக்கழகம் 1989 இல் சிறப்பு ஆய்வாளராக அழைத்து இவரது ஆற்றலைப்பெருமைப்படுத்தியது. மிகச்சிறந்த புலமையாளராகிய இப்பெரியாரின் பணிகள் என்றும் மறக்க முடியாதவை.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல. 021 222 4353 021 492 3200 071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம் 226, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை அச்சுறுத்திப் பழிவாங்குகின்றது அரசு

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், மே. 02

***தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகயை அரசு திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கும் நிலையில் அதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இடைஞ்சலாக இருப்பதாலேயே முன்னணியின் உறுப்பினர்களை அச்சுறுத்திப் பழிவாங்கும் செயற்பாட்டில் அது ஈடுபட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.***



கட்சியின் தேசிய அமைப்பாளரிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த காலங்களில் நடைபெற்ற மாவீரர் தினம் சம்பந்தமாக எமது கட்சியின் தேசிய அமைப்பாளரிடம் விசாரணை மேற்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான விசாரணைகள் என்பது எமது கட்சியின் செயற்பாடுகளை முடக்குதவற்கும் கட்சியின் உறுப்பினர்கள் செயற்பாட்டாளர்கள் ஆதரவாளர்களை அச்சுறுத்துவதற்காகவும் முன்னெடுக்கப்படுகின்ற பழிவாங்கல் செயற்பாடாகவே நாங்கள் கருதுகின்றோம்.

எம்மைப் பொறுத்தவரை இன்றைய மிக நெருக்கடியான கால கட்டத்தில் கட்சி என்ற கோணத்தில் எமது கட்சிதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முன்னின்று செயற்படுகிறது. அந்தப் பணிகளில் கட்சியின் தேசிய அமைப்பாளரான மணிவண்ணணன் முன்னின்று செயற்படும் நிலையில் தான் அவர் மீது விசாரணை மேற்கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல மகளிர் அணி அமைப்பாளர் வாசுகி சுதாகரன் மீது இவ்வாறான இராணுவமும் பொலிஸாரும் இணைந்து அச்சுறுத்தலை மேற்கொண்டிருக்கின்றனர். குறிப்பாக படையினருக்கான தனிமைப்படுத்தல் நிலையங்களைப் பாடசாலைகளில் அமைக்க படையினர் முயற்சி மேற்கொண்டிருந்தனர். இதற்கு எதிராக மக்கள் போராட்டத்தை முன்னெடுத்த நிலையில் அங்கு சென்ற திருமதி வாசுகியை அச்சுறுத்தி கைது செய்யவும் முயற்சி எடுத்திருக்கின்றனர்.

குறிப்பாக மக்கள் மட்டத்தில் எமது கட்சியினர் தீவிரமாக வேலை செய்யும் கால கட்டத்தில் கட்சியின் உறுப்பினர்களை அச்சுறுத்தி உறுப்பினர்களைச் சுற்றியுள்ள கட்சியின் செயற்பாடாளர்களை பயமுறுத்தி ஒட்டுமொத்தமாக எம்மை முடக்கும் வகையிலையே அரசு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

இதேபோன்று மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் உரிய அனுமதிகளை அதாவது பாஸ் அனுமதி பெற்று எமது கட்சியினர் மக்களுக்கான உதவிகளை வழங்கி வருகின்றபோது கூட அந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தி அந்தப் பணிகளைச் செய்யவிடாமலும் பொலிஸார் தடுத்துள்ளனர். இந்தச் சம்பவங்கள் வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி போன்ற பல இடங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன.

வடக்கு – கிழக்கில் இருக்கின்ற மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் எதனையும் இந்த அரசு கொடுக்காமல் இருக்கின்ற நிலையில் எமது கட்சி தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றது. ஆயினும் தமிழருக்காக தமிழர்கள் செய்கின்ற உதவி வழங்கும் முயற்சிகளைத் தொடர்ந்தும் அரசு குழப்பி வருகின்றது – என்றார்.

## யாழ். போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர். சோதனை திங்கள் ஆரம்பம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், மே. 02

யாழ். போதனா வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான பி.சி.ஆர். ஆய்வுகூடப் பரிசோதனை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் வடக்கில் உள்ள தனிமைப்படுத்தும் நிலையங்களில் உள்ளவர்களின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பரிசோதனைகள் ஆரம்பத்தில் அனுராதபுரம் வைத்தியசாலையில் உள்ள ஆய்வுகூடத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இருப்பினும் பலருடைய முயற்சியாலும், ஒத்துழைப்பாலும் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான பி.சி.ஆர் பரிசோதணை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் பரிசோதனைகளை அதிகரிக்கும் நோக்கில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள பி.சி.ஆர் இயந்திரத்தையும் செயற்படுத்த தீர்மானித்திருந்தோம்.

இதன்படி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ்.போதனா வைத்திய சாலையிலும் கொரோன வைரஸ் தொற்று தொடர்பான பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் – என்றார்.

## தரம் 10 – 13 வரை முதல் கட்டமாக பாடசாலைகள் ஆரம்பிக்க திட்டம்

கொழும்பு, மே. 02

நாடு முழுவதும் பாடசாலைகளை இரண்டு கட்டங்களாக ஆரம்பிக்கக் கலந்துரையாடப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தரம் – 10 தொடக்கம் தரம் – 13 வரை முதல் கட்டமாக ஆரம்பிக்கத் திட்டமிடப்படுவதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எம்.எம். ரத்நாயக்க, கொழும்பு ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுப் பரவலைத் தொடர்ந்து மார்ச் மாதம் 13ஆம் திகதி மூடப்பட்ட பாடசாலைகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பில் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு முன்னர் அனைத்துப் பாடசாலைகளுக்கும் கிருமித் தொற்று நீக்கி விசிறப்படவேண்டும். அத்துடன், ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் கிருமித் தொற்று நீக்கி விசிறப்படவேண்டும்.

அனைத்து தரங்களுக்கும் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படாது. தரம் 10 மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு மீண்டும் கற்பித்தல் நடவடிக்கைகள் தொடங்கப்படும். தேசிய மட்டப் பரீட்சைகளை எதிர்கொள்ளும் வகைகள் அவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எம்.எம். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மீள்திருத்த விண்ணப்பங்கள் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஏற்றுக்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் — இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி — இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.05.2020 இல் வெளியிடப்பெற்றது.